உ

சிவமயம்

சைவ சமயிகளே! கேளுங்கள்



ஸ்ரீ [illegible] தேசிக சுவாமிகள்
ஆதீன மடாலயம் Ph : 264446 (04577)
துலாவூர். குன்றக்குடி வழி - 630 206
சிவகங்கை மாவட்டம்.

5-1

அன்பர்களுக்கு அரிய செய்தி

தமிழகச் சைவாதீனங்கள் பதினெட்டில் ஒன்றான, ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் அதீனம் ஸ்ரீ வாஞ்சியத்தில் கி.பி. **913**ல் தோன்றியது. குரு முதல்வர் சற்குரு ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், **சகலாகம சாரசங்கிரஹம்** என்னும் சமஸ்கிருத நூல் செய்தருளினார்கள். **12**ஆவது குரு சுவாமிகள் **சிவஞானசித்தியார் - சுபக்கம், திருவருட்பயன், உண்மை நெறி விளக்கம்** ஆகிய சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை செய்தருளினார்கள்.

பாண்டிய நாட்டிற்கு நகரத்தார்களுடன் வந்து குன்றக்குடியில் இருக்கும் போது 19ஆவது குருமஹா சந்நிதானம் **சேது புராணம், திருப்பரங்கிரிப் புராணம், சிவபுண்ணியத் தெளிவு** ஆகிய செய்யுள் நூல்களை அருளிச்செய்து சைவமும், தமிழும் தழைத்தோங்கச் செய்தார்கள்.

பிறகு துலாவூரில் நிலை பெற்று இயங்கி வருவதால் துலாவூர் ஆதீனம் என்று பெயர் பெற்றது. இது ஒரு வர்த்தக நிறுவனமன்று. தலை சிறந்த சைவ சமயக் கொள்கையைப் பரப்பும் தொண்டையே தம் குறிக்கோளாகக் கொண்டது. மேலும் இங்கு நகரத்தார் பெண்களுக்கும், மற்ற வகுப்பு மெய்யன்பர்களுக்கும், சைவ சமய தீட்சையை சொல்லிக் கொடுத்துச் **சைவ சமயத்தைச் சார்ந்தவராக்குவதுதையே** பிரதானமாகக் கொண்டு செயல்படுகிறது.

இறைவனை வணங்கும் பண்பினை இளைஞர்களிடம் வளர்க்கும் கல்விதான் இப்போது அவசியம். இதை நமது அரசு செய்யவில்லை, ஆகையால்

பெற்றோர்களாகிய நாம்தான் செய்ய வேண்டும். திருநீறு, உருத்திராக்கம் அணிவது. பிறகு தீட்சை பெற்று அநுட்டானம் பஞ்சாட்சர ஜெபம் செய்வது ஆகியவற்றை முடிந்தவரை செய்து வர இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சைவ சமயத்தைச் சார்ந்த நமக்கு, சைவ சமய ஒழுக்கங்கள் என்னென்ன இருக்கிறது என்று எண்ணிப்பாருங்கள். பிறகு சைவசமய தீட்சையைப் பெற்றுக் கொண்டு அதன் படி நடந்து நம் வீட்டையும், நமது உறவினர்களையும், நண்பர்களையும் தீட்சை பெறச் செய்து நாட்டையும் நல் வழிப்படுத்துங்கள்.

இச்செயல் நம்மை நல்வழிப் படுத்தி உய்விக்கும்.

திருச்சிற்றம்பலம்

 5-1

பதிப்புரை

இதில் எங்கள் தந்தையாரைப் பற்றிய சில குறிப்புகளைத் தெரிவிக்க விரும்புகின்றோம். கயிலைமணி சிவத்திரு, நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு தொடக்க விழா **15.10.2001**ம் தேதியன்று அவர்களின் ஜென்ம நட்சத்திரத்தில் நடைபெற இருக்கிறது. இதையொட்டி அவர்களின் பிள்ளைகளாகிய நாங்கள் **"சைவ சமயிகளே கேளுங்கள்"** என்ற இந்நூலை வெளியிடுகின்றோம். எங்கள் தந்தையார் சித்திரபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் **22**ம் நாள் **(08.10.1942)** வியாழக்கிழமை பிறந்தார்கள்.

அவர்கள் இளம் வயதில் குடுமி வைத்து இருப்பார்களாம். ஒரு நாள் பல் விழுந்து விட்டது. அப்போது அவர்களின் பெற்றோர் "உனக்கு பல் விழுந்து விட்டது, நீ பெரிய பிள்ளையாக வளர்ந்து விட்டாய். இனிமேல் பாத்திரங்களில் எச்சிலாக்கி சாப்பிடக் கூடாது. எங்களைப் போல் அண்ணாக்கத்தான் சாப்பிட வேண்டும் என்றார்களாம்". அன்று முதல் அண்ணாக்கச் சாப்பிட

ஆரம்பித்தார்களாம். அதுபோல் எங்களையும் அண்ணாக்கச் சாப்பிட பழக்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த சுகாதரமான பழக்கம், பரம்பரைச் சைவ குடும்பங்களில் இருந்தும் இப்போது இல்லாமல் போய்க் கொண்டிருப்பது மிகவும் வருந்துவதற்குறியது.

அவர்கள் குளிப்பதற்கு ஊரணிக்குச் செல்வார்கள். குளித்ததும் அங்குள்ள அருள்மிகு வரம் தரும் விநாயகர், நாகர், அம்மன் ஆகிய மூர்த்திகளுக்கு பூஜை செய்வார்கள். இதை அறிந்த எங்கள் தாத்தா சிவதீட்சை பெற்றவர்கள்தான் பூஜை செய்ய வேண்டுமென்று நமது விதி நூல்களான வேத சிவாகமங்கள் கூறுகின்றன, என்று சொல்லி **1952**ல் சிவ தீட்சைகளுள் முதலாவதான சைவ சமய தீட்சையைச் சொல்லிக் கொடுத்தார்களாம். பிறகு விநாயகர் முதலான எல்லாத் தெய்வத் திருவுருவங்களுக்கும் பூஜை செய்யும் முறைகளையும், வீட்டில் விழாக் காலங்களில் பூஜை செய்யும் முறைகளையும் அவ்வப்போது சொல்லிக் கொடுத்தார்களாம். உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக சமஸ்கிருதமும் சொல்லிக் கொடுத்தார்களாம். குன்றக்குடியில் **E.S.L.C.**யும், காரைக்குடியில் **S.S.L.C.**யும் படித்தார்கள்.

எங்கள் தாத்தா பாட்டி (மூங்கில் பட்டியில் பிறந்த தை. வை. சுசீலா.) எங்கள் அம்மாவை எங்கள் அய்யா (அப்பா) அவர்களுக்கு **06.06.1962**ம் வருடம் திருமணம் செய்து வைத்தார்கள். பிறகு அவர்களின் மாமனார் திரு. தை. வைத்தியலிங்கம் அவர்களின் விருப்பப்படி கர்ணம், மான்யூல், டெஸ்ட், சர்வே டிரைனிங் படித்தார்கள். பிறகு ஹெட்மேன் டெஸ்ட், கிராம சுகாதாரம், அதிகாரங்களும், அலுவல்களும் ஆகிய தேர்வுகள் எழுதித் தேர்ச்சி பெற்று கர்ணமாகவும், குன்றக்குடி ஹெட்மேனாகவும் வேலை பார்த்துள்ளார்கள்.

எங்கள் தாத்தா தவத்திரு. ஞா.பாலஉதயமூர்த்தி குருக்கள் அவர்கள் எங்கள் தந்தையாருக்கு குருவாக இருந்து **22.02.1964**ல் இரண்டாவதாகப் பெறவேண்டிய விசேட தீட்சையையும், பூநூலும் போட்டு சிவ பூஜையும் சொல்லிக் கொடுத்து **தேசிகர் என்னும் ஆன்மார்த்த சிவபூஜகர்** பட்டத்தையும் வழங்கினார்கள்.

தேவகோட்டை **"வைத்தியமணி"** **சித.வே. சண்முகநாத பிள்ளை** அவர்களிடம் **27.06.1980**ல் **"பிராணாயாமப் பயிற்சி"** பெற்றார்கள். எங்கள் அய்யா சிவ பூஜை செய்வதற்காக பாதரசத்தைக் கட்டி, சிவலிங்கமாகச் செய்து கொடுத்தார்கள்.

இனி மூன்றாவதாக பெற வேண்டிய நிர்வாண தீட்சை, அக்கினி கார்யம் கிரியா அபிஷேகத்தையும் **25.06.1984**ல் சொல்லிக் கொடுத்து, **குருக்கள் என்னும் லோக தருமணி** பட்டத்தையும், பிறகு ஆசாரிய அபிஷேகத்தையும் செய்வித்து **ஆசாரியர் என்னும் சிவதருமணி** பட்டத்தையும், தீட்சா நாமத்தையும் வழங்கி, ஆதீன இளவரசராக்கினார்கள். எங்கள் தாத்தா முக்தி பெற்றபின், எங்கள் அய்யா சிகையையும், பூநூலையும், நீக்கிவிட்டு வாரிசு உரிமைப்படியும், ஆதீன வழக்கப்படியும், ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் ஆதீனத்தின் **29**ஆவது குருமகா சந்நிதானமாக **30.08.1985**ல் பொறுப்பேற்று அருளாட்சி செய்து வருகிறார்கள்.

இங்ஙனம்,

ஞான. சுந்தரேசன் M.A., M.A., B.Ed., — இந்திரா B.A., துலாவூர்

ஞான. சாந்தா — தை. வை. மாணிக்கம், ரைஸ்மில், மூங்கில்பட்டி

ஞான. வளர்மதி M.A.,P.T. — **A.** திருநாவுக்கரசு B.Com., வலையபட்டி

ஞான. லலிதா B.A., CLIS — **B.** செந்தில் அரசன், திருவாரூர், கடலூர்.

மேலும்

தி. சந்திரமோகன் S/o. **B.** தியாகராஜன் B.Com., — கலிங்கப்பட்டி

தி. சுமதி — சுப்பிரமணியன் B.Sc., — இனாம்குளத்தூர்

தி. சசிகலா — கலிங்கப்பட்டி.

முன்னுரை

ஒருவர் எந்த நாட்டில் பிறவி பெற்றிருக்கிறாரோ அவர் அந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று நிச்சயிக்கப்படுகிறது. அது போல தாய் தந்தையரைக் கொண்டே பிள்ளைகளின் சமயமும், சாதியும் நிச்சயிக்கப்பெறுகின்றன. ஆகையால் இதைப் பிறப்புரிமை எனலாம். நமது சமயத்தையும், சாதியையும் அதன் கொள்கைகளையும், சிறப்புக்களையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதைத் தெரிந்து கொள்ளாவிட்டால், இந்து சமயத்தவர்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு வெளிநாடுகளில் தோன்றி இந்தியாவில் பரவியுள்ள பிறமதத்தவர்கள் அவரவர்களின் சமயங்களுக்கு நம்மை மதம் மாற்றிவிடுவார்கள். ஆகையால் தத்தம் சமயக் கல்வி கற்றல் அவசியம்.

இந்திய நாட்டின் வேத வழிப்பட்ட சமயங்களைக் குறிக்கும் பொதுச்சொல் **இந்துமதம்** என்பதாம். இந்துக்களின் சமய நெறியினை வகுத்துரைக்கும் நூல் வேதம் எனப்படும். வேதவழிப்பட்ட சமயத்தை வைதீக சமயம் என்பர். வேதங்களில் பற்பல தெய்வங்களின் வழிபாடுகளைக் குறிப்பிட்டிருந்தாலும், சிவபெருமானை முதன்மையாகவும், தலைமையாகவும் கொண்டு சிறப்பிக்கப்பெறுகிறது.

சமயம் என்றால் :

ஒன்று படுதல், ஒப்ப உணர்தல், குறிக்கோள் கடைப்பிடித்தல், கடவுட் பற்று, மதம், உறுதி என்று பொருள். உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் இன்ப விருப்பமும், துன்ப வெறுப்புமே, இயற்கையாகக் காணப் படுகின்றன. இவ்வுலக இன்பங்களெல்லாம் நிலையில்லாத சிற்றின்பமாகவேயிருக்கின்றன. அதனாலேயே அறிவுடைய பெரியோர்கள் பேரின்பத்தை அடைய முயலுகின்றார்கள், அவ்வாறு பேரின்பத்தை அடைய அறிவுடையோர் கொண்டொழுகும் வழிகளே மதங்களாம்.

1. மதம் என்பது கொள்கை என்றும் பொருள் தரும். இது ஆன்மீகத் துறை பற்றிய கொள்கைக்கே சிறப்பாக உரிய பெயராயிற்று. கொள்கையை இலட்சியம் என்றும் கூறலாம். ஆன்ம லாபமாகிய இலட்சியத்தை அடைவதற்கு சில வழிமுறைகளைப் பெரியோர்கள் வகுத்தமைத்தார்கள். அந்த அமைப்பே மதம் (சமயம்) என்பதாம்.

சைவம்:

சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியெம்மான் ஆகிய முதல்வனை, இறைவனை, உமையொருபாகனை, பரமசிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு மனம் – மொழி – மெய்களால் – வழிபடுவோர் சமயம் (மதம்) சைவம். சைவர். என்றால் சிவபெருமானை வழிபடுவோர் என்று பொருள். சைவன் என்பது சிவபெருமானைக் காட்டுந் திருப்பெயர்களில் ஒன்று. சைவ சமயத்தினரின் உலகியல் ஒழுக்கத்தில்

தலைசிறந்தது புலாலுண்ணாமை, இதனை ஊன் நீக்கி உண்பவனைச் சைவன் என்றும், ஊனுடன் உண்பவனை அசைவன் என்றும் தொன்று தொட்டு உலகம் கூறுவதால் அறியலாம்.

சாதி :

சாதி என்பது தொழிலால் வந்தது. தீண்டாமை என்பது ஆசார அனுட்டானங்களால் வந்தது. தூய்மைக் குறையுடையோரைத் தூயவர் விலக்கி வாழத் தொடங்கிய காரணத்தால் தீண்டாமை என்ற சொல் பிறந்தது. நமது சமயங்கள் விரதங்களாலும், ஆசார அனுட்டானங்களாலும் மேம்பட்டோரை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த வரன் முறைகள் நாமும் தூயவராய் வாழ்ந்து, மேம்பாடு அடைய வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோருக்கும் உண்டாக்கும். தூயோரையும், பக்தியுடையோரையும் நம் சமயம் ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் அவர்களைப் பாராட்டுகின்றனர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் எல்லாச் சாதியினரும் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் சிவ பக்தர்கள்.

மதம் :

மதம் (சமயம்) என்பது ஆறறிவு கொண்ட மனிதனுக்கு, அவனது ஆறாவது அறிவின் மகத்துவத்தை உணர்த்தி, அவனைத் தெளிவான, தீர்க்கமான சிந்தனைக்கு உட்படுத்தி, அழிவில்லாத ஆனந்த நல்வாழ்விற்கு இட்டுச் செல்லும் நல்ல வழிப் பாதையே ஆகும். நாம் பிற நாடுகளிலோ, பிற மதங்களிலோ

பிறக்காமல் இந்திய நாட்டின் புண்ணிய பூமியாகிய தமிழ் நாட்டில் இந்து சமயத்தில் பிறவி பெற்றிருப்பது நன்று. இவர்கள் சைவ சமயக் கொள்கைகளைத் தெரிந்து கொண்டு, அதைக் கடைப்பிடித்து இப்பிறவியைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ள முயல வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

சைவ சமயத்தினராவதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் முதலில் தக்க சைவாசாரியரிடம் சென்று சைவ சமய தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். பிறகு சைவ சமய அநுட்டானத்தையும், பஞ்சாட்சர ஜெபம் செய்து வரவேண்டும். சைவ சமயம் பற்றிய செய்திகளை உங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே **“சைவ சமயிகளே கேளுங்கள்”** என்ற இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கிறோம். சைவ சமய தீட்சை பெற்றவர்களே, சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். தீட்சை பெறாதவர்களை ஹிந்துக்கள் எனலாம். திருநீறு உருத்திராக்கம் அணிவது அவர்களின் பிறப்புரிமை. சமய தீட்சை பெற்று அநுட்டானம், பஞ்சாட்சர ஜெபம் செய்தல் ஆகியவற்றைச் செய்து வருவது அவர்களின் சைவ சமயக் கொள்கை கடைப்பிடித்தல் எனலாம். முறைப்படி செய்யாவிட்டாலும், முடிந்த வரை செய்து வர நமது பிள்ளைகளைத் தயார் செய்ய வேண்டும்.

தமது பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு முயற்சிப்பது போல, சமயக் கல்வி கற்கவும், தீட்சை பெறச் செய்யவும் எந்தத் தந்தையும் முயல்வதில்லை. இந்நிலை

நீடிப்பது நன்றன்று. நீடித்தால் நம் சமயம் வளராது. மேன்மைகொள் சைவநீதி சைவ சமையிகளிடையே மங்குதலுறாமல் நிலவுதல் ஒன்றையே பயனாகக் கருதிச் **சைவ சமயிகளே கேளுங்கள்** என்ற இந்நூலை எமது **அறுபதாம் ஆண்டுத் துவக்க விழா மலராக** **15.10.2001**ல் வெளியிடப்பெறுகிறது.

இங்ஙனம்
"கயிலைமணி" சிவத்திரு.
ஸ்ரீ நிரம்பஅழகிய தேசிகராகிய
ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள்
29 ஆவது குருமகா சந்நிதானம்.

நாள் - **02.09.2001.**
துலாவூர் - ஆதீனம், குன்றக்குடி வழி,
சிவகங்கை மாவட்டம், அ. கு. எண். - **630 206.**
தொலைபேசி - **264446**

பயோடேட்டா

பெயர்	:	"கயிலைமணி" சிவத்திரு நிரம்ப அழகிய ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
தந்தை	:	ஸ்ரீ. ஞா. பாலஉதயமூர்த்திக் குருக்கள்.
தாய்	:	ஜானகி
பெரிய தாயார்	:	சுப்பம்மாள்
பிறந்த தேதி	:	8.10.1942
மதம்	:	ஹிந்து – சைவ சமயம்
கோத்திரம்	:	சைவ வேளாளர்
உடன் பிறந்தவர்	:	பா. தியாகராஜன், B.Com.,
மனைவி & மணநாள்	:	சுசீலா, 6.6.1962
கல்வி	:	பெரும் பள்ளி இறுதி வகுப்புவரை
தொழிற்கல்வி	:	கர்ணம்&ஹெட்மேன், தேர்ச்சி பணியாற்றல்
சமயக் கல்வி : தீட்சாகுரு	:	தந்தை. சமஸ்கிருதம், பூஜைமுறைகள்
சைவ சமய தீட்சை	:	1952. சைவத் திரு – விக்ரஹ பூஜை
விசேட தீட்சை	:	22.2.1964. தேசிகர் – சிவ பூஜை
நிர்வாண தீட்சை	:	25.5.1984 குருக்கள் – அக்கினிசார்யம்
ஆசாரியஅபிடேகம்	:	26.5.1984 ஆசாரியப் பிரதிட்டை
ஆதீன அதிபர் பதவி	:	30.8.1985 முதல்
பிள்ளைகள்	:	ஞான. சாந்தா ஞான. சுந்தரேசன் M.A., M.A., B.Ed., ஞான. வளர்மதி M.A., PT. ஞான. லலிதா B.A., CLIS

தற்போதுள்ள சுவாமிகள்



29ஆவது குருமஹாசந்நிதானம்
கயிலைமணி சிவத்திரு
ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்களின் 60ம் ஆண்டு
தொடக்க விழா மலர். 15. 10.2001.

உ
சிவமயம்

சைவ சமயிகளே கேளுங்கள்

1. சைவ சமயம் :

சைவ சமயம் இந்து சமயத்தின் ஒரு பகுதியாகவேதான் இருந்து வருகிறது. இது பாரத நாட்டின் தேசீய சமயம்: பரந்த நோக்குடையது ; தனியொரு மனிதரால் தோற்றுவிக்கப்பெறாதது. இது ஆகும், இது ஆகாது என்னும் பிணக்கில்லாது. எல்லாச் சமயங்களையும் தன் அங்கங்களாகக் கொண்டு நாடு, மொழி, குலம், செல்வம், வறுமை முதலிய வேறுபாடுகளை நோக்காது, எல்லா உயிர்களையும் இறைவன் திருவருளால் நெறியில் செலுத்தவல்ல உலகத் தாய்ச் சமயம் ஆகும். சிவபெருமானால் முதற்கண் தோற்றுவிக்கப்பெற்ற தொன்மைச் சமயம். உலகில் உள்ள எல்லா சமயங்களிலும் சைவ சமயம் மேலானது. நல்ல கொள்கைகளை உடையது.

இதைப் பற்றிச் சுருக்கமாகவாவது தெரிந்து கொள்வோமா?

2. வழிபடுங் கடவுள் :

சிவபெருமான் ஒருவரே ; அவர் தூய உடம்பினராகவும், ஒளி உடம்பினராகவும், கண்களுக்குப் புலப்படாதவராகவும் உள்ளவர். சிவபெருமான் மும்மூர்த்திகளில் ஒருவராகிய உருத்திரன் அல்லர். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும்தலைவர். மற்ற எல்லாத் தெய்வங்களும் அவருக்கு அடியவராயுள்ள ஆன்மாக்களே. (ஆன்மா = உயிர்)

3. கடவுளின் தன்மை :

கடவுள் என்றும் உள்ளவர்	–	அவருக்குப் பிறப்பு இறப்பு இல்லை
அவர் எங்கும் நிறைந்தவர்	–	அவர் இல்லாத இடமே இல்லை
அவர் எல்லாம் அறிபவர்	–	அவர் அறியாதது ஒன்றும் இல்லை
அவர் எல்லாம் வல்லவர்	–	அவரால் இயலாத காரியம் ஒன்றுமில்லை
அவர் வரம்பி லின்பர்	–	அளவிடப்படாத ஆனந்தம் உடையவர்
அவர் தம்வய முடையவர்	–	பிறர்வய முடையவரல்லர்
அவர் மலமாசற்றவர்	–	இயல்பாகவே பாசங்களில் நீங்கியவர்
அவருடைய அறிவு இயற்கை அறிவு	–	ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர் அவர்
ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்	–	அவருக்குச் சமமானவரோ மேலானவரோ இல்லாதவர்
அவர் பேரருள் உடையவர்	–	ஆன்மாக்களிடத்தில் கைமாறில்லாத அளவுகடந்த திருவருளே மேனியாக உடையவர்

கடவுள் என்றால் – கடவுள் எல்லாவற்றையும் கடந்து இருப்பவர் ; எல்லாவற்றிலும் கலந்திருப்பவர் ; எல்லா உடலிலும் உள்ளத்திலும் உயிருக்கு உயிராக இருப்பவர் ; இத்துணைச் சிறப்புடைய கடவுளைச் சைவ சமயம் சிவ பெருமான் என்று கூறுகிறது.

சிவ பெருமானுக்கு உரிய வடிவங்கள் : அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வகைத் திருமேனியாம். இதில் அருவத் திருமேனியுடைய பொழுது ***சிவன்*** எனவும், அருவுருவத் திருமேனியுடைய பொழுது ***சதாசிவன் (சிவலிங்கம்)*** எனவும், உருவத் திருமேனியுடைய பொழுது ***மகேசுவரன்*** எனவும் பெயர் பெறுவார்.

4. பிரமாண நூல்கள் :

சிவபெருமான் சொன்னது வேதமும், சிவாகமும் ; வேதம் – உலக மக்கள் பொருட்டுப் பொது நூலாகவும் ; சிவாகமம் – அவர்களுள் சத்தினி பதம் பெற்ற பக்குவிகள் பொருட்டு சிறப்பு நூலாகவும், அருளித்தந்தவை. திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சிவபுராணங்கள் இவற்றின் விரிந்த நூல்கள்.

5. கிரியா காண்டப் பிரமாண நூல்கள் :

சிவாகமங்கள், சகலாகமசார சங்கிரகம், பத்ததிகள். "ஆகமம் இன்றேல் ஆலயம் இன்றாம்" இவையாவும் சமஸ்கிருத நூல்கள்.

6. முக்கிய தத்துவக் கொள்கை :

இறை (பதி) உயிர் (பசு) = ஆன்மா. உலக மூலமாகிய மாயை (பாசம்) பதி, பசு, பாசம் இம்மூன்றையும் தொடர்பு படுத்தி நிற்பது இறையருள் (அருட்சக்தி).

7. தத்துவக் கொள்கைக்குப் பிரமாண நூல்கள் :

சிவாகம ஞானபாதப் பகுதிகள். தமிழில் சிவ ஞான போதமும் அதைச் சார்ந்த சைவ சித்தாந்த சாத்திர நூல்களும்.

8. சைவ சமயத்தின் சிறப்பு :

உயிர் பிறப்பு, இறப்பு உடையது ; கடவுள் தோற்றமும் ஈறும் அற்றவர். உயிர்க் குணம் இன்மையே கடவுளின் தன்மை எனச் சைவம் ஒன்றே கூறுகிறது. சிவ நெறியில் பிறப்பு வேற்றுமை இல்லை. ஆண், பெண் வேற்றுமை இல்லை. இவர் தேவர், அவர் தேவர் என்ற மயக்கமில்லை. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று கூறுவது சைவமே. பொய் கூறல், மதுவருந்தல் புலாலுண்ணல் போன்ற ஐம்பெருங் குற்றங்களைச்

செய்யலாகாதென்றும் உலோகப் பாத்திரங்களில் எச்சிலாக்கிச் சாப்பிடக் கூடாதென்றும் கூறுவது சைவ சமயம் மட்டுமே.

9. சைவ சமய ஆசாரியர்கள் :

ஸ்ரீ திருஞானசம்பந்தர், ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீ சுந்தர மூர்த்தி, ஸ்ரீ மாணிக்கவாசகர் என நால்வர். இவர்களை சமய குரவர்கள் என்போம்.

திருஞானசம்பந்தர் அருளியது **1,2,3,** திருமுறைகள். திருநாவுக்கரசர் அருளியது **4,5,6,** திருமுறைகள். சுந்தர மூர்த்தி அருளியது **7**ம் திருமுறை இம்மூவர் அருளியதும்தேவாரம் ஆகும். மாணிக்கவாசகர் அருளியது திருவாசகமும், திருக்கோவையாரும் **8**ம் திருமுறை. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு **9**ம் திருமுறை திருமந்திரம் **10**ம் திருமுறை. காரைக்கால் அம்மையார் முதலிய **12** பேர் அருளிச் செய்தது **11**ம் திருமுறை. பெரிய புராணம். **12**ம் திருமுறை, இவற்றை தோத்திர நூல்கள் என்போம்.

10. சந்தான ஆசாரியர்கள் :

ஸ்ரீ மெய்கண்டார், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார், ஸ்ரீ மறை ஞானசம்பந்தர், ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் என நால்வர். இவர்களை சந்தான குரவர்கள் என்போம்.

மெய்கண்டார் அருளியது சிவஞானபோதம். அருணந்தி சிவாச்சாரியார் அருளியது சிவஞான சித்தியார், இருபா இருபஃது என **2** ம்; மறை ஞானசம்பந்தர் நூல் ஒன்றும் செய்யவில்லை. உமாபதி சிவாச்சாரியார் அருளியது – சிவப்பிரகாசம், உண்மை நெறி விளக்கம், நெஞ்சுவிடு தூது, வினா வெண்பா, திருவருட் பயன்,

சங்கற்பநிராகரணம், போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, இவை 8ம் மற்றும் சிலவும். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம் 14ம் இவற்றை சாத்திர நூல்கள் என்போம்.

11. சமயச் சின்னங்கள் :

திருநீறும் உருத்திராக்கமும் ; இவற்றை அணிந்திருப்பது சிவபெருமானின் திருவருட் பேற்றிற்கு அறிகுறியாகும். தீட்சை பெற்றவர்கள் பூநூலும் அணிந்திருப்பார்கள். திருநீற்றின் சிறப்பை திருஞானசம்பந்தர் அருளிய திரு ஆலவாய்த் திருப்பதிகத்தில் **"மந்திரமாவது நீறு"** எனத் தொடங்கிச் சிறப்பாகப் கூறியுள்ளார்கள்.

12. சமய நுழைவுக் கிரியை :

உலகிலுள்ள சமயங்கள் அனைத்திற்கும் அவற்றிற் கெனத் தனித்தனியே சமயச் சடங்குகள் இருப்பதை நாம் அறிவோம். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் சமயச் சடங்குகள் வாயிலாகத்தான் அவ்வச் சமயங்களுக்கு உரிமை உடையவர்களாகின்றார்கள்.

ஆதி சைவர்களுக்கும், சைவர்களுக்கும் – சைவசமய தீட்சை பெற்று பூநூல் அணிந்து, அநுட்டானம் பஞ்சாட்சர ஜெபம் செய்வது. பிராமணர்களுக்கு – பூநூலும், காயத்ரீ ஜெபமும், வைஷ்ணவர்களுக்கு – பூநூலும், முத்திராதானமும், திருமண்ணிட்டு அஷ்டாச்சர ஜெபமும், கிருஸ்தவர்களுக்கு – புது நன்மை என்னும் ஞானஸ்நானமும் ; முஸ்லீம்களுக்கு – சன்னதும் கலிமா ஓதித் தொழுகை செய்வதும் ; சமய நுழைவுக் கிரியைகளாம்.

சைவக் குடும்பத்தில் பிறந்த ஆண், பெண் இருபாலரும் **7,9,11** இதில் எந்த வயதிலாவது சிவதீட்சைகளுள் முதலாவதாகப் பெற வேண்டிய சைவ சமய தீட்சை பெற்றுக் கொண்டு அதை நன்றாகப் பழகிக் கொண்டு, விடாது தொடர்ந்து கடைப் பிடித்து ஒழுகுபவரே சைவ சமயத்தை சார்ந்தவராவார் என்று நமது விதி நூல்களான ஆகமங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.

13. தீட்சைகள் :

குருநாதர் தமது சீடர்களைப் பிறவிப்பிணியிலிருந்து விடுவிப்பதற்காகவும், சைவ சமய நெறியில் செலுத்துவதற்காகவும், கடவுள் உண்மையை அறிவிப்பார். அவர் திருவடியை அடையப் பக்குவம் உண்டாவதற்காகச் செய்யப் பெறும் சிவ மூல மந்திர உபதேசங்களே சிவ தீட்சைகள் எனப் பெறும். சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என மூன்று வகைப்படும்.

14. சைவ சமய தீட்சையின் பெருமைகள் :

மனிதனை மனிதனாக்குவது கல்வி, அதுபோல மனிதனைச் சைவனாக்குவது சைவ சமய தீட்சையாகும். நாம் சைவ சமயத்தைச் சார்ந்திருக்கச் சிவ தீட்சைகளுள் முதன் முதலாகப் பெற வேண்டியது சைவ சமய தீட்சையாகும். இது மற்ற தீட்சைகளுக்கு அடிப்படை யானதும், எளிமையானதுமாகும். இது ஆன்மீக வழியில் செல்வதற்கு நுழைவாயில் போன்றது என்றும், தம்மைச் சைவ சமயத்தைச் சார்ந்தவனாகப் பதிவு செய்து கொள்ளுதல் என்றும், சைவசமய தீட்சை பெற்றவரே சைவராவாரென்றும், இது இம்மைக்கும், மறுமைக்கும்

ஏதுவாகிய புண்ணியங்களைச் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பதென்றும், நாள் வழிபாடு தொடங்கும் நிகழ்ச்சி என்றும், சைவ சமய ஆசார அநுட்டானங்களைச் செய்யும் தகுதியைப் பிறப்பிப்பது என்றும் போற்றப் பெறும்.

இத்தீட்சை பெற்றவர்கள் அநுட்டான முறைகளை நன்றாகப் பழகிக் கொண்டு வழுவாது செய்து வருவதோடு இயம நியமங்களையும் கடைப்பிடித்து வரவேண்டும். விநாயகர், சுப்ரமண்யர் முதலிய உருவத் திருமேனிகளுள் ஒன்றிற் பற்று வைத்து அச்சிலைக்கு வீட்டில் தினந்தோறும் பூஜை செய்து வரலாம். இவர்கள் ஆகம முறைப்படி திருமணம், சாந்தி முதலானசுபகாரியங்களைச் செய்யவும், செய்து கொள்ளவும் தகுதியுடையோராவார். ஆண்கள் தமது பெற்றோர்களுக்குப் பூர்வ, அபர கிரியைகளையும், திதி, அமாவாசை தற்பணம் முதலிய காரியங்களுக்குத் தானே கர்த்தாவாகயிருந்து செய்வதற்கும் தீட்சை பெற்றவரே அதிகாரம் பெற்றவராவார்.

15. சிவ தீட்சையின் அவசியம் :

சைவக் குடும்பத்தில் பிறப்பதற்கும், சமயம் முதலிய தீட்சைகளைப் பெறுவதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். சிலர் சைவக் குடும்பத்தில் பிறக்கும் பேறு பெற்றும், சைவ சமய தீட்சையைக் கூடப் பெறாதவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் அச்சமயத்தவராகக் கருதப்படமாட்டார்கள் என்றும், அவர்கள் அசுத்தமானவர்கள் என்றும், அவர்கள் எவ்விதச் சமயச் சடங்குகளும் செய்து கொள்ளவோ, செய்யவோ, அருகதையற்றவர்கள் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. ஆகையால் சிவதீட்சைகளைப் பெறவேண்டியது மிகவும்

அவசியமானது . **“தீட்சையில்லையேல் மோட்சமில்லை** ”என்கிறது சிவாகமம். **“சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது”** என்கிறது சிவஞான சித்தியார். கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்கு, துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை – என்கிறார் திருவள்ளுவர். சுவாமிக்குப் பூவைச்சாத்தி, தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை என்கிறார் திருநாவுக்கரசர்.

16. சிவ மூல மந்திரம் :

இம்மந்திரத்தை குரு மூலம் உபதேசக்கிரமமாகக் கேட்டறியத்தக்கது. நகாராதிபஞ்சாட்சரம் என்றால் “ந” என்ற எழுத்தை முதலாக உடைய ஐந்து எழுத்துக் கொண்ட சிவ மூல மந்திரம் என்று பொருள். பஞ்சாட்சரப் பதிகத்திலும், நமச் சிவாயத் திருப்பதிகத்திலும் இதன் சிறப்பை விரிவாகக் காணலாம்.

17. ஜெபம் செய்வதால் நமக்கு ஏற்படும் பயன்கள் :

சிவமூல மந்திரமாகிய திரு ஐந்தெழுத்தைத் தினந்தோறும் காலை **108,** மாலை **108,** உருவீதம் ஜெபம் செய்து வருவதால் நம் உடலில் நோய் எதிர்ப்பு உண்டாகிறது. ஞாபக சக்தியும், அறிவாற்றலும் வளர்கிறது. அலையும் மனம் அமைதி பெறுகிறது. சுவாச ஓட்டமும் சீராகிறது. இது இம்மையில் நல்வாழ்வையும், மறுமையில் முத்திப் பேற்றையும் வழங்கக் கூடியது. நமது ஆன்மா ஜெபசித்தியால் வலிமை பெற்றிருப்பதனால் தீயசக்திகள் நம்மை அணுகமுடியாது. “உருவேறத் திருவேறும்” என்பர் ஆன்றோர்.

18. குருநாதர் :

இவர் நமது ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற முக்கியப்பங்கு வகிப்பவர். சீடர்களின் உயிரைப்பற்றிய பிணியாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை நீக்க ஸ்ரீ பஞ்சாட்சரம் என்னும் மருந்தைக் கொடுப்பவர். மேலும் இம்மருந்து உலகப்பற்றைக் குறைத்து கடவுள் பற்றை வளர்க்கும் தன்மை உடையது.

சைவ பத்ததிகளின் விதிமுறைகள் சிவாகம அடிப்படையில் அமைந்தது. ஆகையால் அதனைச் செய்து வைக்கும் ஆசாரியரும் அச்சிவாகம அடிப்படையில் அமைந்த சமயம், விசேடம், நிருவாணம், ஆகிய தீட்சைகளையும், ஆசாரிய அபிடேகத்தையும் பெற்றவராய் இருத்தல் வேண்டும். அவர் அநுட்டானம், ஆன்மார்த்த சிவபூஜை முதலியவற்றில் வழுவாது நிற்பவராய் இருத்தல் வேண்டும். திருமணமாகி மனைவியுடன் வாழ்பவராயிருத்தல் வேண்டும். இத்தகைய தகுதியுடைய ஆசாரியர்களது ஒவ்வொரு சொல்லும் மந்திரமாக நின்று பயன்தரும், என்று ஆகமங்கள் கூறுகின்றன.

19. சீடர்கள் :

இத்தகைய குருநாதரிடம் சென்று கல்வியும் நல்லொழுக்கமும் உள்ள எனக்கு **சைவ சமய தீட்சை** செய்தருள வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவரும் சமய தீட்சைக்குரிய சிவ மூல மந்திரத்தை உபதேசம் செய்து வைத்து, உன்னால் முடிந்த வரை **தொடர்ந்து ஜெபம் செய்து வா!** எல்லா நலனும் பெறுவாய் என்பார்.

அதற்குச் சீடர் **இன்று முதல் சைவ சமய ஆசார அநுட்டானங்களை என்னால் முடிந்தவரை தவறாமல் செய்து வருவேன்.** என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

தீட்சா குரு சிவசக்தியை நம்மிற் பதியவைக்கிறார். அவ்வாறு பதிந்த சிவசக்தியை மேலும் மேலும் வளர்த்துப் பூரண மாக்கிக் கொள்வதே சைவானுட்டானச் செயலாகும். சீடர்கள் அநுட்டானம் செய்யவில்லை என்றால் பயன் இல்லை. குருவுக்கும் புண்ணியமில்லை.

ஒருமைக் கண்தான் கற்றகல்வி ஒருவற்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

திருக்குறள் – 398.

ஒருவனுக்கு ஒருபிறவியில் தான் (கற்ற கல்வி) பெற்ற சிவ தீட்சை ஏழு பிறப்பிலும் சென்று உதவும் தன்மை உடையது.

20. குறிக்கோள் கடைப்பிடித்தல் :

பிறப்பதும் சிறிது காலம் இருப்பதும் பிறகு இறப்பதும் மனித வாழ்க்கை. பிறந்தவர் அனைவரும் இறப்பது நிச்சயமென்றாலும் அக்கூட்டத்தில் ஒருவனல்லன் நீ ; உனக்கு வாழ்க்கையின் குறிக்கோள் ஒன்றுண்டு, அதுதான் சிவ தீட்சைகளைப் பெறுவது. சிவதீட்சையின் மூலம் சிவபெருமான் திருவடிப் பேற்றைப் பெறுவது. அதற்குத் தடையாவனயாவும் உனக்குப் பொருள்களே ; (விலக்கப் பட்ட பாவச் செயல்கள்) பகைப்பொருள்களை விட்டு நீங்குவதே புத்தியுடையான் செயலாகும்.

உனக்கு உறவானது எதுவோ ? அதனைப்

பற்றிக்கொள். அவ்வுறவே உன்னை நன்னெறிப் படுத்தி உய்விக்கும். உனக்கு உறவான திருநீறும் உருத்திராக்கமும் மேலும் விதிக்கப்பட்ட புண்ணியச் செயல்களும், ஆகிய இவைகளைப் பற்றி நிற்பதால் உனக்குச் சிவனடியார்களின் உறவு கிட்டும். அவர்கள் மூலமாகக் குரு கிடைப்பார். குரு உனக்கு சைவ சமய தீட்சை செய்தருளிச் சிவ மூலமந்திர ஜெப சித்தியால் (சிவத்தை) அவரை அடையும் வழியைக் காட்டுவார். அவ்வழியைப் பின்பற்றிச் செல்வது உனது கடமை. குருவருளாலே திருவருள் சேரப் பெறுவாய். அச் சிவபெருமானே குரு வடிவில் வந்து பாச நீக்கம் செய்து சிவப் பேற்றை உனக்கு வழங்குவான். அப்போதே பிறப்புத் துன்பத்திலிருந்து உண்மையான விடுதலையை நீ பெறுவாய். அதைத்தான் வீடு பேறு(மோட்சம்) என்பது.

வேதம், சிவாகமம், தோத்திரம், சாத்திரம் ஆகியன சிவவாக்கு என்று கூறப்பட்டுள்ளது. சிவவாக்கைப் புறக்கணிப்பதும், பழிப்பதும், சிவத்துரோகமல்லவா? அச்சிவத் துரோகத்தைச் செய்யத் தூண்டுவோர் யாராயிருந்தாலும் அவரைத் தீயவரெனக்கருதி ஒதுக்கிவிடுவதே நன்று. ஒவ்வொருவருக்கும் குறிக்கோள் வேண்டும். **"குறிக்கோள் இல்லாது கெட்டேனே"** என்று வருந்திப் பாடுகிறார் அப்பரடிகள்.

21. விதி என்பதைப் புரிந்து கொள்வோம் :

விதியை, தலைவிதி என்றும், கர்ம வினை என்றும், விதிப்பயன் என்றும் கூறி எல்லாவற்றையும் விட்டு விடுவது வாழ்க்கையின் முன்னேற்றமாகுமா? நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் நமது பூர்வ ஜென்ம

கர்ம வினையின் அடிப்படையிலே அமைகிறது என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அதன்படியே நமது முயற்சிகளும், முன்னேற்றங்களும் அமைகின்றன. முற்பிறவியில் செய்ததும், இப்பிறவியில் செய்ததும், அடுத்த பிறவியில் நடக்கப்போவதைத் தீர்மானிக்ககின்றன. இறப்பு பிறப்பு இந்தச் சுழற்சியை மாற்றுவதில்லை. இதைப் புரிந்து கொண்டுவிட்டால், நம்முடைய இன்றைய வாழ்க்கைக்கு நாமே பொறுப்பாளி என்பதை உணர்ந்து கொள்வோம். கடவுளையோ, நமது பெற்றோரையோ, மற்றவர்களையோ குறைகூற மாட்டோம்.

நாம் இன்று எப்படி இருக்கிறோம் என்பதையும், நாம் அடுத்த பிறவியில் எப்படி இருக்கப்போகிறோம் என்பதையும் "**நாமே தீர்மானிக்கின்றோம்**" என்று தெரிந்து கொள்ள வேண்டும். **விதி** என்ற ஒன்றையாரோ தம் தலையில் எழுதுவதாக நினைப்பது முற்றிலும் தவறாகும். நாம் செய்யும் நல்லனவும், தீயனவும், நமக்கு நன்மையையும், தீமையையும் அளிக்கும் விதியாய் அமைகின்றன. எனவே விதியை வகுத்துக்கொள்பவர்கள் நாம்தான் என்பதில் சந்தேகமேயில்லை.

நமக்கு நல்ல எண்ணங்களும், அதற்குரிய நல்ல முயற்சிகளுடன், கடவுள் பக்தி, தீட்சை பெறல், முதலாக விதிக்கப்பெற்ற புண்ணியச் செயல்களைச் செய்து, விலக்கப்பட்ட பாவச் செயல்களைச் செய்யாமலிருந்தால், நாம் நமது எதிர்காலத்தை நல்ல விதமாக உருவாக்கிக் கொள்ளலாம்; என்ற சித்தாந்தம் ஆரோக்கியமானது ; அனுபவபூர்வமானது. அது தலைவிதிப் பயன் என்று சலிப்படைவதன்று. நம்முடைய நோக்கமும், முயற்சியும் நல்லதாக இருந்தால் வெற்றிகிடைக்காவிட்டாலும் நாம் கலங்கவேண்டியதில்லை.

கிடைக்காததைக் கர்ம வினை (பிராரப்தம்) அடிப்படையிலும், கிடைத்ததை மேலும் முன்னேறுவதற்குரிய அடிப்படையாகவும் கொள்ளுவதற்கு அது உதவும். வெளியே கிடைப்பது எதுவானாலும் உள்ளூர முன்னேற்றம் கிடைப்பதற்கு இது பெரிதும் உதவுகிறது. **"நன்றும் தீதும் பிறர் தர வாரா"** என்றும், பேறிழி வின்பமொடு பிணி மூப்புச் சாக்காடென்னும் ஆறும்முன் கருவுட் பட்டது – அருணந்தி சிவம்.

22. விதிக்கப் பெற்ற புண்ணியச் செயல்கள் :

திருநீறு உருத்திராக்கம் அணிவது, சிவ தீட்சை பெறுவது, அநுட்டானம் செய்வது, திரு ஐந்து எழுத்து ஓதுதல்; குருலிங்க சங்கம வழிபாடு செய்தல். தமிழ் வேதமாகிய தேவாரம், திருவாசகம், முதலிய பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்தல், சிவலிங்க தரிசனம், மடம், கோவில் திருப்பணி செய்தல், மஹா கும்பாபிஷேகம் செய்வித்தல், மாதா, பிதா, குரு, முதலியோரை வழிபடுதல், பேணுதல், சிவனடியார்களுக்கு உணவளித்தல், விரதமிருத்தல், பொறுமை இரக்கம், அடக்கம், உடையவராய் ஒழுகுதலுமாகும்.

23. விலக்கப்பட்ட பாவச் செயல்கள் :

சிவநிந்தை (சிவபெருமானுக்கு ஒப்பாக வேறு தெய்வத்தை நினைத்தல், சொல்லுதல்) குரு நிந்தை, வேத சிவாகம நிந்தை, சிவதிரவியம் கவர்தல், கொலை, களவு, சூது, பொய் கூறல், மதுவருந்தல், புலாலுண்ணல், பிறன் மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், அழுக்காறு, புறங் கூறல், செய் நன்றி மறத்தல், இப்படி எல்லாவிதமான தீவினைகளையும் விலக்குவது, சைவ சமயம் மாத்திரமே.

24. சிவாலயத் தொண்டு :

"சிவலாயம் தோறும் மக்களுக்குச் சைவ சமயத்தைத் தேச மொழிகளிலேயே போதித்தல் வேண்டும்" எனச் சிவபெருமான் காமிக ஆகமத்தில் கூறியுள்ளார். ஆகையால் சைவப்பிரசங்கமும், தேவார பாராயணமும் செய்தல், செய்வித்தல் அவசியம்.

25. சிவாலயப் பாதுகாப்பு :

சிவபெருமான் திருக்கோவில்களில் புறச் சமயத்தினரின் பிரச்சாரமோ ஊடுருவலோ வேறு தீங்குகளோ ஏற்படா வண்ணம் பாதுகாத்தல் சைவ சமயத்தார்களின் கடமையாகும்.

26. சைவ சமயச் சாதனைகள் :

சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கும் வீடு பேறு அடைவதற்குரிய நெறிகளாம். இவைகள் ஒன்றுக்கொன்று காரணமாகயிருந்து உதவுவதுடன், தனித்தனியே பயன் தருகிற தகுதியும் உடையன.

27. பயன்கள் :

சாலோகம், சாமீபம், சாரூபமாகிய மூன்றும் பதமுத்தி என்றும், ஞானத்தால் வருவது சாயுச்சியம் என்னும் பரமுத்தி என்றும் சொல்லப் பெறும். பரமுத்தியைவிட ஆன்மாக்கள் அடைவதற்கு வேறொன்றுமில்லை.

28. உண்மைச் சைவர்கள் :

சிவ தீட்சைகளைப் பெற்றுச் சிவபெருமானை வழிபடுபவர்களே உண்மைச் சைவர்கள். அனாதி

சைவராகிய சிவபெருமான் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவதம், சத்தியோஜாதம் என்னும் தமது ஐந்து திருமுகங்களாலும் ஆதியில் தீட்சை அருளிய கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர், ஆகிய ஐந்து முனிவர்களின் வழி வந்து, சமய, விசேட, நிர்வாண தீட்சைகளையும், ஆசாரிய அபிஷேகத்தையும் பெற்று, ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய சிவபூஜைகளுக்கு அதிகார முள்ளவர் **ஆதி சைவர்** என்றும், இதில் பரார்த்தத்திற்கு சிவன் கோவிலில்லாமல் ஆன்மார்த்தம் மட்டும் செய்து வருபவர்கள் **சைவர்** என்றும்பெயர் பெறுவார்கள்.

அந்தணர் குலத்தில் சிவதீட்சை பெற்றவர் **மகாசைவர்** என்றும், அரசகுலம் வணிகர் குலங்களில் சிவ தீட்சை பெற்றவர்கள் **அநுசைவர்** என்றும், வேளாளர் குலத்தில் சிவ தீட்சை பெற்றவர்கள் **அவாந்தர** சைவர் என்றும், சிவ தீட்சை பெற்ற பிரதிலோமர் முதலியோர் **அந்திய சைவர்** என்றும் பெயர் பெறுவார்கள்.

29. உணவுச் சைவர்கள் :

சைவ சமயத்தினரின் உலகியல் ஒழுக்கத்தில் தலை சிறந்தது புலாலுண்ணாமை. இதனை ஊன்நீக்கி உண்பவனைச் சைவன் என்றும், ஊன்உடன் உண்பவனை அசைவன் என்றும் தொன்று தொட்டு உலகம் கூறுவதால் அறியலாம். உணவுச் சைவர்களில், உண்மைச் சைவர்கள் மட்டுமின்றி மற்றையச் சமயவாதிகளும், வேற்று நாட்டவர்களும், சமயப்பகைவர்களும் கூட இருப்பார்கள், ஆகவே இவர்களைச் சைவர்களென்று சொல்லுவது எள்ளளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.

30. பிறவிச் சைவர்கள் :

பிறப்பால் சைவர்களென்று தங்களைப் பெரிது படுத்திக் கொள்ளுகிறவர்களும் நம் நாட்டில் இருக்கிறார்கள், பிறப்பு மட்டும் ஒருவனுக்குப் பெருமை சிறுமைகளைக் கொடுப்பதில்லையென்பது அறிஞர்கள் கருத்தாகும். சமய தீட்சை கூடப் பெறாமல் சைவச் சாதியர் என்று பிதற்றுவோர் எப்படிச் சைவராவர்? சிவ தீட்சை எதுவும் பெறாமல் தங்களைச் சைவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வது போலியாகவே முடியுமென்பதை எல்லோரும் உணர வேண்டும்.

31. பட்டங்களும் பதவிகளும் :

பரம்பரைச் சைவக் குடும்பத்தில் பிறந்து சிவ தீட்சைகளுள் முதன் முதலாகப் பெற வேண்டிய சைவ சமய தீட்சையைப் பெற்றவர்கள் **சைவத்திரு** என்னும் **திருஉருவப்பூஜகர்** பட்டத்தையும்; இரண்டாவதாகப் பெற வேண்டிய விசேட தீட்சையைப் பெற்றவர்கள் **தேசிகர்** என்னும் **ஆன்மார்த்த சிவ பூஜகர்** பட்டத்தையும்; மூன்றாவதாகப் பெற வேண்டிய நிர்வாண தீட்சையையும், கிரியா அபிஷேகத்தையும் பெற்றவர்கள் **குருக்கள்** என்னும் **லோகதருமணி** பட்டத்தையும்; நிர்வாண தீட்சையும் ஆசாரிய அபிஷேகத்தை பெற்றவர்கள் **ஆசாரியர்** என்னும் **சிவதருமணி** பட்டத்தையும்; தீட்சா நாமத்தையும் குருநாதரால் வழங்கப் பெறுவார்கள்.

இந்தப் பட்டங்கள் அனைத்தும் சைவ சமயத்தில் அவரவர்களின் தகுதியைக் குறிப்பதாக விளங்குகின்றன. இந்த நுட்பமானவிளக்கம்

தெரியாதவர்கள், பிள்ளை மகன் – பிள்ளை என்றும், ஓதுவார் மகன் – ஓதுவார் என்றும் கவிராஜர் மகன் – கவிராஜர் என்றும், தேசிகர் மகன் – தேசிகர் என்றும், குருக்கள் மகன் – குருக்கள் என்றும் தமக்குத் தாமாகவே பட்டத்தைப் போட்டுக்கொள்கிறார்கள். இதைத் தம்பட்டம் என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறோம். மேலும் கல்லூரியில் படிக்காத ஒருவர் தம் பெயருக்குப்பின் **B.A., B.Sc., B. Com., B.E., B.B.A.,** என்று பட்டத்தைப் போட்டுக்கொள்ள வாய்ப்பில்லை, அதுபோல் தான் இதுவும் என்றறிக.

32. சைவ சமயச் சடங்குகள் :

சிவாகமங்களில் விதிக்கப்பெற்ற சைவசமயச் சடங்குகள், பூர்வ கிரியை, அபரகிரியை என இரண்டு வகைப்படும். **பூர்வ கிரியை** என்பது – ஒருவரின் பிறப்பு முதல் உயிர் உள்ள வரை செய்ய வேண்டிய கிரியைகளைத் தெரிவிப்பது. **அபரகிரியை** என்பது – ஒருவரின் வாழ்நாள் முடிந்த பிறகு அவரைக் குறித்து செய்யவேண்டிய கிரியைகளைத் தெரிவிப்பது. பூர்வகிரியை – சிவதீட்சைகளையும், பூஜை முறைகளையும் சைவ சோடச (பதினாறு) கிரியைகளையும், சாந்தி; சதாபிஷேகம் போன்றவற்றை விரிவாகத் தெரிவிக்கின்றன. அபரகிரியை – இறந்தவரைக் குறித்து அவரின் ஆன்மா சிவலோகப்பிராப்தி (முத்தி) அடையும் பொருட்டு, அவர் பெற்ற மகனாலோ அல்லது சுவிகாரம் வந்த மகனாலோ செய்யப்பெறும் ஈமச் சடங்குகள், வருஷாப்திகம் (திதி) அமாவாசைத் தர்ப்பணம், அமாவாசை விரதம் முதலியனவற்றைச் செய்வது.

சைவ சமயத்தில் பிறந்தும் சமயதீட்சை கூடப்

பெறாமல் வாழ்ந்து இறந்த மக்களுக்கு பறவை, விலங்குகளுக்குப் போல அபரகிரியைகள் செய்யவேண்டுவதில்லை. சாதாரண மக்களுக்குச் செய்வதைப் போல புதைப்பதோ, எரிப்பதோ செய்யலாம்.

முடிவுரை

சைவ சமயத்திலே பிறக்கும் புண்ணியம் வாய்க்கப் பெற்றவர்களில் பலர்; சமய தீட்சை பெற்று அநுட்டானம் பழகிப் பஞ்சாட்சர ஜெபம் செய்தலன்றி ; இக்காலத்தில் வாழ்நாளை வீணாகக் கழிக்கின்றனர். இதற்குக் காரணம் சைவ சமயம் பற்றியும், அதன் உயர்வைப்பற்றியும், இதுவரை அவர்களுக்கு யாரும் சரியாகச் சொல்லிக் கொடுக்கவில்லை என்பதுதான்.

சைவ சமயிகளே கேளுங்கள் என்ற இந்நூலைப் படித்த பின், சைவ சமயத்தின் உயர்வையும், அதன் அருமை பெருமைகளையும் தெரிந்து கொண்டவர்கள் நிச்சயம் சைவ சமய தீட்சை பெற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். அதன் படி தாமும் நடந்து, தமது குடும்பத்தினரையும், தம் உறவினர்களையும், நண்பர்களையும் தீட்சை பெறச்செய்வார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

சிவபெருமானது திருவருள் அவரது திருவுள்ளப்படி கடைப்பிடிக்கும் நற்பேறு மனிதராகப் பிறந்தவரனைவருக்கும் கிடைக்கும் வாய்ப்பில்லை. இதை அருணந்திசிவம் "**சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது**" என்கிறார். சைவ ஒழுக்கம் சிவ தீட்சையாலன்றி முடிந்த முடிவாகிய பயனைத் தரமாட்டாது.

இவ்வுண்மையை உணர்ந்து முறையாகத் தீட்சைகளைப் பெற்றுப் பயன் பெறும் வாய்ப்பில் ஒழுகுபவர்கள் மிகச் சிலராகவே இருக்கின்றார்கள். "**அவனருளாலே அவன் தாள் வணங்கி**" பிறப்பையும் பந்த பாசங்களை ஒழிப்பதே இப்பிறவிப்பயனாகும். இப்பிறவி தப்பில் எப்பிறவி வாய்க்குமோ? யாரறிவார்? எனவே சிவ தீட்சை பெற்று அதன் பயனாகிய வீடு பேறடைய முயற்சிப்போமாக! இம் முயற்சி திருவினையாகச் சிவ பெருமான் திருவருள் புரிவாராக !

வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

ஆதீனப் பணிகள்

1. ஆன்மார்த்த சிவ பூஜா மூர்த்தியாகிய அருள்மிகு மங்களாம்பிகை சமேத வாஞ்சீஸ்வர சுவாமிக்கு காலையும், மாலையும் சுவாமிகளே பூஜை செய்தல்.

2. நாட்டுக்கோட்டை நகரத்தார், உறுதிக் கோட்டை வட்டகை நகரத்தார், ஏம்பல் அண்டக்குடி நகரத்தார் இவர்களின் பெண்களுக்கு சைவசமய தீட்சை செய்வித்தல்.

3. சைவர்களுக்கும் மற்ற வகுப்பு மெய்யன்பர்களுக்கும், ஆண், பெண், வேற்றுமை இன்றி சிவதீட்சை செய்வித்தல்.

4. நித்தியபூஜை நிதித்திட்ட உபயதாரர்களின் நலன் வேண்டி பூஜை அருச்சனை செய்து, பிரசாதம் வழங்கல் அல்லது அனுப்புதல்.

5. ஆண்டுதோறும் புரட்டாசிமாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை திதியில் மஹா குருபூஜை நடத்துதல்.

6. மாதாந்திரப் பிரதமைத் திதியில் குருமுதல்வர் சிலைக்கு சிறப்பு வழிவாடு செய்தல்.

7. ஸ்ரீவரம் தரும் விநாயகர், ஸ்ரீ வடக்குவாசல் செல்வி மங்களாம்பிகை அம்மன் கோவில், ஸ்ரீ ஆதீனமிளகி ஐயனார் கோவில்களுக்கு தினசரி பூஜை நடத்துதல்.

நலமே தழைக!

மீனாட்சி, காரைக்குடி. ☎ : 437682